தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1972 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு கே ஏ மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக்குறிப்பு.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவராகவும், பின்னர் 1952-லிருந்து 1957-ம் ஆண்டு வரை ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு சட்டப்பேரவையின் உறுப்பினராகவும், 1952-லிருந்து 1954-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு மாநிலத்தின் அறநிலையத் துறை அமைச்சராகவும் இருந்த திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் 7—3—1972-ம் நாளன்று மறைந்து விட்ட செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சென்னை மாநகரத்தின் மேயராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் இப்பேரவையின் சார்பாக நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவையினர் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.